வெளியீடு எண் 84.

திருக்கோளிலித் திருப்பதிகங்கள்

தருமபுர ஆதீனம்.

உ

குருபாதம்

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனம் 25-வது மகாசந்நிதானம் **ஸ்ரீ-ல-ஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளவர்கள்** திருப்பதிகம் பெற்ற 274 சிவதலங்களிலும் பெருமானுக்கு அபிஷேக ஆராதனை செய்யவும், அந்தந்தத் தலத்திருப்பதிகங்களைத் தனித்தனியே சிறுசிறு நூலாக அச்சிட்டு ஆராதனைகாலத்து வழங்கவும் திருவுள்ளங்கொண்டு ஆணையருளியவாறு இந்நூல் வெளியிடப் பெற்றது.

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனம்
25-வது மகாசந்நிதானம்
ஸ்ரீ-ல-ஸ்ரீ சுப்பிரமணியதேசிக
ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

வெளியீடு எண் 84

உ

குருபாதம்

திருச்சிற்றம்பலம்

திருக்கோளிலித் திருப்பதிகங்கள்

இது

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனம்

25-வது மகாசந்நிதானம்

ஸ்ரீ-ல-ஸ்ரீ சுப்பிரமணியதேசிக ஞானசம்பந்த

பரமாசாரிய சுவாமிகள் அவர்கள்

ஆக்ஞைப்படி

வெளியிடப்பெற்றது.

தருமபுர ஆதீனம்

1945

முதற்பதிப்பு
பிரதிகள் 500

தருமபுர ஆதீனம்
ஞானசம்பந்தம் பதிப்பகத்தில்
பதிப்பிக்கப்பெற்றது.

சிவமயம்.

முன்னுரை

திருக்கயிலாயபரம்பரைத் தருமபுர ஆதீனத்தில் இருபத்தைந்தாவது குருமகா சந்நிதானமாக எழுந்தருளியிருந்து அருட்செங்கோல் செலுத்திவருகின்ற **ஸ்ரீ-ல-ஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்கள்** தாம் ஞானபீடத்தில் எழுந்தருளியது முதல் "சைவசமயத்தை யாங்கணும் பரப்பவேண்டும்; அதன் உண்மையினை யாவரும் அறியச்செய்யவேண்டும்" என்பதையே குறிக்கோளாகக்கொண்டு செய்தருளுகின்ற பணிகள் பலவாகும். அவைகளுள் ஆதீனச் சார்பில் சிவதலங்கள்தோறும் பெருமானுக்கு விசேஷ அபிஷேக ஆராதனை செய்வித்தலும், ஆராதனை காலத்தில் அந்தந்தத் தலப்பதிகங்களை முறைப்படி ஓதச்செய்து ஒவ்வொரு பதிகத்தின் முடிவிலும் கற்பூர ஆராதனை

செய்யச் செய்தலும், பதிகங்களைத் தனியே சிறுசிறு புத்தகமாக அச்சிடுவித்து அன்பர்கட்கு வழங்கச்செய்தலும் ஒன்றாகும். அத்திருவுள்ளப் பாங்கின்படியே **திருக்கோளிலித் திருப்பதிகங்கள்** என்னும் இந்நூல் வெளிவந்துள்ளது. அன்பர்கள் பதிகங்களைப் பாராயணஞ்செய்து **ஸ்ரீ கோளிலிநாதர்** திருவருளைப் பெற்று நீடுவாழ்வார்களாக.

வைய நீடுக மாமழை மன்னுக
சைவ நன்னெறி தாந்தழைத் தோங்குக
மெய் விரும்பிய அன்பர் விளங்குக
தெய்வ வெண்டிரு நீறு சிறக்கவே.

உ

சிவமயம்

தலச்சிறப்பு

சைவசமய பரமாசாரிய சுவாமிகள் மூவர்கள் அருளிச் செய்த திருப்பதிகங்கள் பெற்ற தலங்களுள் திருக்கோளிலி என்னுந் தலமும் ஒன்ருகும். இக்காலத்து திருக்குவளை என வழங்கப்படுகிறது. தருமபுர ஆதீனத்துக்குச் சொந்தமான தேவஸ்தானங்களுள் இதுவும் ஒன்ருக விளங்குகிறது. சப்தவிடங்கஸ்தலங்களுள் இத்தலம் அவனிவிடங்கர் எழுந்தருளியிருக்கும் தலமாகும்.

உலகத்தைப் படைக்கும் ஆற்றலைப் பெறுதற்கு உபாயம் சங்கரனைப் பூசித்தலே என உணர்ந்த பிரமதேவன் இங்குவந்து சந்திரநதியின் அலைகளால் வீசப்படும் வெண்மணலை இலிங்கமாக அமைத்துப் பூசித்து வழிபட்டான்; வழிபட்டதோடு கோயிலும்

அமைத்து விழாவும் நடத்தினன். அதனல் இத்தலத்திற்குப் பிரமபுரம் என்ற பெயரும், பெருமானுக்குப் பிரமபுரிநாதர் என்ற பெயரும், தீர்த்தத்திற்குப் பிரமதீர்த்தம் என்ற பெயரும் உண்டாயிற்று. பின்னர் பிரமனது வழிபாட்டுக்குகந்த பெருமான் குற்றம் (கோள்)நீக்கி, ஞான மருளி, உலகம் படைக்கும் ஆற்றலையும் கொடுத்தான். அது முதலாக இத்தலத்திற்கும் பெருமானுக்கும் முறையே கோளிலி எனவும் கோளிலிநாதர் எனவும் பெயர்கள் வழங்கிவரலாயின. அம்மையார் திருநாமம் **வண்டமர்பூங்குழலி**.

அரசுரிமையினைத் துறந்து சென்ற பாண்டவர்களில் ஒருவனன வீமன் என்பான், நரபலியினை விரும்பி மக்களுக்குத் துன்பத்தை உண்டாக்கிவந்த பகாசுரனைக்கொன்றதனல் தன்னைப்பற்றிய பிரமகத்தியினை நீக்கிக் கொள்ளுதற் பொருட்டு இங்குவந்து வழிபட்ட சிறப்பினையுடையது இத்தலம். குண்

டையூர் கிழாரால் கொடுக்கப்பட்ட நெல் மலையினை எடுத்துச் செல்லுதற்பொருட்டு சுந்தரமூர்த்தி சுவாமிகள் ஆள் வேண்டு மென்று விண்ணப்பஞ் செய்த சிறப்பினைக் கொண்டதும் இத்தலமே.

அவனிவிடங்கர் வரலாறு

திருமால் புத்திரப்பேற்றை விரும்பி இறை வனைக் குறித்துத் தவஞ்செய்ய, இறைவன் அம்மையோடும் வெளிப்பட்டு அநுக்கிரகஞ் செய்தனர். அப்போது திருமால் யாது காரணத்தினலோ அம்மையாரை வணங்கா திருக்கவே அம்மையார் "உனது புதல்வன் இறைவன் சினத்தால் அழிக" என்று சபித் தனர். சாபத்தைக்கேட்டு அஞ்சி நடுங்கிய திருமால் இறைவன், உமை, முருகன் ஆகிய மூன்று வடிவங்களும் ஒன்று சேர்ந்த

சோமாஸ்கந்தமூர்த்தியை அநேக காலம் பூசித்துவரவே, அம்மையும் அப்பனும் வெளிப்பட்டு "யாம் முன்னர்க்கூறிய வரமும் சாபமும் பிழையா. ஆயின் உன்மகன் இறப்பினும் மீண்டும் உயிருடன் விளங்கி அரசாளுவன்" என்று அருளிச்செய்து மறைந்தனர். அவ்வாறே மன்மதன் தோன்றி பெருமானது நெற்றிக்கண்ணுக்கு இரையாகி மீண்டும் உயிர்பெற்றனன்.

திருமாலோ தாம் பூசித்த சோமாஸ்கந்த மூர்த்தியைத் தமது மார்பிலே வைத்துக் கொண்டு பாற்கடலிலே அறிதுயிலிலமர்ந் திருந்தனர். அப்போது வாற்கலி என்னும் அவுணன் தேவர்களைத் துன்புறுத்த இந்திரன் திருமாலிடஞ் சென்று காத்தருள்க என வேண்டினன். திருமால் சோமாஸ்கந்த மூர்த்தியை இந்திரனிடம் கொடுத்து பூசிக்கும் படிச் சொல்லிவிட்டு அவுணனிடம் சென்று போர் புரிந்து அவன் உயிரை மாய்த்தனர்.

அதுமுதற்கொண்டு அம்மூர்த்தி இந்திரனால் பூசிக்கப்பட்டுவந்தது.

பின்னொருநாள் வலாசுரனால் செய்யப்படும் இன்னலுக்கு ஆற்றாது கலங்கும் இந்திரனுடைய வேண்டுகோட்கிணங்கி, முசுகுந்த சக்ரவர்த்தி சேனைகளோடு சென்று உதவி புரிய, இந்திரன் வலனைக்கொன்று வலாரி எனும் பெயரைப்பெற்றான். அப்போது இந்திரன் வழிபட்டுவரும் மூர்த்தியைக்கண்டு ஆசைப்பட்ட முசுகுந்தர் "யான் இம்மூர்த்தியை வழிபடவேண்டும்" என்றுகூற இந்திரன் கொடுக்க மனமில்லாமையால் அதற்கோர் சூழ்ச்சிசெய்ய எண்ணினான். தெய்வத்தச்சனைக்கொண்டு அதுபோல ஆறுவடிவங்கள் செய்யச்செய்து ஒவ்வொன்றாக முசுகுந்தர் கையில் கொடுக்க, முசுகுந்தர் அவைகளை எல்லாம் வாங்கி 'இவர் அவர் அன்று' என்று ஆறுதரமும் கூறினார். கடைசியில் இந்திரன் தான் வழிபட்டுவந்த மூர்த்தியைக் காட்டி

"இவர் அவராமோ" என்றான். அப்போது பெருமான் இந்திரன் அறியாதவகையில் "நாம் உன்பால் வந்தோம்" என்று அருள் செய்ய, முசுகுந்தர் "இவர் அவரே" என்று கூறி அதனைப் பெற்றுக்கொண்டனர். பின்னர் முசுகுந்தர் இந்திரனிடம் விடைபெற்றுக் கொண்டு பூமியில்வந்து இந்திரன் பூசித்த சோமாஸ்கந்த மூர்த்தியைத் திருவாரூரிலும், மற்றைய ஆறு மூர்த்திகளையும் திருநாகைக்காரோணம், திருநள்ளாறு, திருக்காறாயில், திருக்கோளிலி, திருவான்மியூர், திருமறைக்காடு என்னும் ஆறு தலங்களிலும் தாபித்து விதிப்படி பூசித்து வந்தான். ஆங்காங்கும் திருப்பணிகள் முதலியனவும் செய்தான். இத் தலத்திலுள்ள அம்மூர்த்தியின் திருநாமம் **அவனிவிடங்கத்தியாகர்.**

சுந்தரர் நெல்மலை பெற்றது

சுந்தரர் திருத்தொண்டத்தொகை அருளிச் செய்து பரவையார் திருமாளிகையில் எழுந் தருளியிருக்குங் காலத்தில், சுந்தரரிடத்தில் அன்பு நிறைந்த குண்டையூர்கிழார் என்பார் செந்நெல், அரிசி, பருப்பு முதலியன எல்லாம் பரவையார் மாளிகைக்கு நாடோறும் அனுப்பிவரும் திருத்தொண்டில் ஈடுபட்டு வந்தார். இவ்வாறிருக்குங்கால் மழைவளங் குறைந்தது. நிலவளஞ் சுருங்கிற்று. உண வுப் பொருள்களோ கிடைக்கவில்லை. தமது பணிக்கு இடையூறு உண்டாயிற்றே என்று கவன்றார். கவலையினால் இரவு துயின்றா ரில்லை. அடியார் கவலையை அகற்றத் திரு வுளங்கொண்ட பெருமான் கனவில் "ஆரு ரன்றனக்கு உன்பால் நெல் தந்தோம்" என்று அருளிச்செய்து, நிதிக்கோமானாகிய குபேர னுக்கும் ஆணையிட்டனர். இரவே குண்டை யூர் எல்லை முழுதும் நெல்மலையாகக் குவிந்

தது. காலை வந்தது. திருவருட்பெருக்கைக் கண்டு ஆச்சரியமுற்ற குண்டையூர்கிழார் சுந்தரரைத் தொழுதவராய் எழுந்தார். நெல்மலையினைக் கண்டு கவலைநீங்கி இதனை எவ்வாறு ஆரூரிற்கொண்டுபோய்ச் சேர்க்க முடியும் என்று எண்ணினுர். ஆயினும் இதனை அவர்க்கு அறிவிப்போம் என்று செல்லவே, சுந்தரரும் எதிரேவந்தார். மேலும மேலும் ஆனந்தம் அதிகரித்துச் சுந்தரர் திருவடிகளை வணங்கி நடந்ததைத் தெரிவித்தனர். சுந்தரரும் குண்டையூர்வந்து, விண்ணினை யளக்கும் நெல்லின் வெற்பினை நோக்கி அதிசயமுற்றுர். இந்நெல்லை எடுத்தற்கு வேண்டிய ஆளும் அப்பெருமானேயன்றி வேறு யாரால் தரமுடியும் என்று கருதினுர். அவ்வாறே அருகேயுள்ள கோளிலிக்குச் சென்று பெருமானை வணங்கினுர். "குண்டையூர்ச்சில நெல்லுப்பெற்றேறன், ஆளிலை யெம்பெருமான் அவை அட்டித்தரப்பணியே" என்று விண்ணப்பித்தனர். "நெற்குவியலை

நம்பூதங்கள் கொண்டுபோய்ச் சேர்க்கும்'' என்று அசரீரி பிறந்தது. அவ்வாறே பூதங்க ளெல்லாம் குண்டையூர் நெல்மலையைக் கொண்டுவந்து ஆரூரில் வைத்தது. எங்கு பார்த்தாலும் நெல்மலை. ஊரிலுள்ளார் "எவ்வுலகில் இந்நெல்மலை விளைந்தன" என்று அதிசயித்தார். பரவையாரும் கண்டுமகிழ்ந்து "மக்கள் யாவரும் தங்கள் தங்கள் வீட்டின் எல்லைக்குட்பட்ட நெற்குன்றுகளை அள்ளிக் கொள்ளக்கடவர்" என்று முரசறையச் செய்தார். இவ்வாறாக ஊரிலுள்ளார் யாவரும் இன்பமடைய, சுந்தரர் இன்பத் துறையில் விளங்கினார்.

பதிகத்தில் காணப்படும் குறிப்புக்கள்

தலம்:- பொன்போலத் திகழும் கொன்ன
மறங்களைக் கொண்டது. கொஞ்சுகி
மேகத்தைச்சாரும். குரங்குகள் மிக்குக்கு
கும். செந்நெல்வயல் சூழ்ந்தது. பண்ணுள
பயில்வது. விழாவொலி அறாதது. செ
பொன் மாளிகை சூழ்ந்தது.

பிரவரலாறுகள்:- (1) காலனைக் கடிந்
மார்க்கண்டருக்கு அருள்பாளித்தது. (
மண்ணிநதியில் மணலால் இலிங்கமமைத்
பாலைக்கொண்டு அபிஷேகஞ் செய்யுங்கா
அதனைச் சிதைத்த தந்தையாரது காலி
வெட்டிய சண்டீசருக்கு சண்டீசபதத்தையு
மலர்மாலையினையும் கொடுத்தது. (3) ஐ
புலனடக்கி நாடோறும் பூசித்துவந்தவனு
பஞ்சவரிலொருவனுமான அருச்சுனனுக்கு
பாசுபதமீந்தது. (4) நமிநந்தியடிகளுக்
அருள்பாலித்தது. (5) பால்வேண்டியு

பாலனுக்காகப் பாற்கடலைச் செல்லென்று பணித்தது.

சுந்தரர் ஆள்வேண்டும் முறை:- "பெருமானே; உன்னையே நான் எப்பொழுதும் ஏத்துகின்றேன். நீயோ பாதி ஓர் பெண்ணை (உமையை) வைத்திருக்கின்றாய்; அதுமட்டுமா? திருமுடியிலும் கங்கையாளை வைத்திருக்கின்றாய். ஆதலால் மாதர் வருத்தம் அறியும் தன்மையுடையாய். ஆகவே பரவையினது வருத்தத்தையும், வாட்டத்தையும் அறிந்திருப்பாய். அவ்வாறு அவள் வருந்தாமல், நெல்லை எடுத்துச்செல்ல ஆள்வேண்டும்" என்று விண்ணப்பஞ்செய்தார்.

உ

சிவமயம்

திருஞானசம்பந்த சுவாமிகள் திருப்பதிகம்

பண் - பழந்தக்கராகம்

திருச்சிற்றம்பலம்

நாளாய போகாமே நஞ்சணியுங் கண்டனுக்கே
ஆளாய வன்புசெய்வோ மடனெஞ்சே யரனாமம்
கேளாய்நங் கிளைகிளைக்குங் கேடுபடாத் திறமருளிக்
கோளாய நீக்குமவன் கோளிலியெம் பெருமானே. 1

ஆடரவத் தழகாமை யணிகேழற் கொம்பார்த்த
தோடரவத் தொருகாதன் றுணைமலர்நற் சேவடிக்கே
பாடரவத் திசைபயின்று பணிந்தெழுவார் தம்மனத்தில்
கோடரவந் தீர்க்குமவன் கோளிலியெம் பெருமானே. 2

நன்றுநகு நாண்மலரா னல்லிருக்கு மந்திரங்கொண்
டொன்றிவழி பாடுசெய லுற்றவன்ற னேங்குயிர்மேல்
கன்றிவரு காலனுயிர் கண்டவனுக் கன்றளித்தான்
கொன்றைமலர் பொன்றிகழுங் கோளிலியெம் பெருமானே.

வந்தமண லாலிலிங்க மண்ணியின்கட் பாலாட்டுஞ்
சிந்தைசெய்வோன் றன்கருமந் தேர்ந்துசிதைப் பான்வருமத்
தந்தைதனைச் சாடுதலுஞ் சண்டீச னென்றருளிக்
கொந்தணவுமலர்கொடுத்தான் கோளிலியெம்பெருமானே.

வஞ்சமனத் தஞ்சொடுக்கி வைகலுநற் பூசனையால்
நஞ்சமுது செய்தருளு நம்பியென வேநினையும்
பஞ்சவரிற் பார்த்தனுக்குப் பாசுபத மீந்துகந்தான்
கொஞ்சுகிளி மஞ்சணவுங் கோளிலியெம் பெருமானே. 5

தாவியவ னுடனிருந்துங் காணாத தற்பரனை
ஆவிதனி லஞ்சொடுக்கி யங்கணனென் றாதரிக்கும்
நாவியல்சீர் நமிநந்தி யடிகளுக்கு நல்குமவன்
கோவியலும் பூவெழுகோற் கோளிலியெம் பெருமானே. 6

கன்னவிலு மால்வரையான் கார்திகழு மாமிடற்றான்
சொன்னவிலுமாமறையான்றோத்திரஞ்செய்வாயினுள்ளான்
மின்னவிலுஞ் செஞ்சடையான் வெண்பொடியா னங்கையினில்
கொன்னவிலுஞ் சூலத்தான் கோளிலியெம் பெருமானே. 7

அந்தரத்திற் றேரூரு மரக்கன்மலை யன்றெடுப்பச்
சுந்தரத்தன் றிருவிரலா லூன்றலவ னுடனெரிந்து
மந்திரத்த மறைபாட வாளவனுக் கீந்தானும்
கொந்தரத்த மதிச்சென்னிக் கோளிலியெம் பெருமானே. 8

நாணமுடை வேதியனு நாரணனு நண்ணவொணாத்
தாணுவெனை யாளுடையான் றன்னடியார்க் கன்புடைமை
பாணனிசை பத்திமையாற் பாடுதலும் பரிந்தளித்தான்
கோணலிளம் பிறைச்சென்னிக் கோளிலியெம் பெருமானே.

தடுக்கமருஞ் சமணரொடு தர்க்கசாத் திரத்தவர்சொல்
இடுக்கண்வரு மொழிகேளா தீசனையே யேத்துமின்கள்
நடுக்கமிலா வமருலகந் நண்ணலுமா மண்ணல்கழல்
கொடுக்ககிலாவரங்கொடுக்குங்கோளிலியெம்பெருமானே.

நம்பனைநல் லடியார்க ளுமுடைமா டென்றிருக்கும்
கொம்பனையாள் பாகனெழிற் கோளிலியெம் பெருமானை
வம்பமருந் தண்காழிச் சம்பந்தன் வண்டமிழ்கொண்
டின்பமர வல்லார்க ளெய்துவர்க ளீசனையே. 11

திருச்சிற்றம்பலம்

உ

சிவமயம்

திருநாவுக்கரசு சுவாமிகள் திருப்பதிகங்கள்

திருக்குறுந்தொகை

திருச்சிற்றம்பலம்

மைக்கொள் கண்ணுமை பங்கினன் மான்மழுத்
தொக்க கையினன் செய்யதோர் சோதியன்
கொக்க மர்பொழில் சூழ்தரு கோளிலி
நக்க னைத்தொழ நம்வினை நாசமே. 1

முத்தி னைமுத லாகிய மூர்த்தியை
வித்தி னைவிளை வாய விகிர்தனைக்
கொத்த லர்பொழில் சூழ்தரு கோளிலி
அத்த னைத்தொழ நீங்குநம் மல்லலே. 2

வெண்டி ரைப்பர வைவிட முண்டதோர்
கண்ட னைக்கலந் தார்தமக் கன்பனைக்
கொண்ட லம்பொழிற் கோளிலி மேவிய
அண்ட னைத்தொழு வார்க்கல்ல லில்லையே. 3

பலவும் வல்வினை பாறும் பரிசினால்
உலவுங் கங்கையுந் திங்களு மொண்சடை
குலவி னான்குளி ரும்பொழிற் கோளிலி
நிலவி னான்றனை நித்தல் நினைமினே. 4

அல்ல லாயின தீரு மழகிய
முல்லை வெண்முறு வல்லுமை யஞ்சவே
கொல்லை யானை யுரித்தவன் கோளிலிச்
செல்வன் சேவடி சென்று தொழுமினே. 5

ஆவின் பால்கண் டளவி லருந்தவப்
பாலன் வேண்டலுஞ் செல்லென்று பாற்கடல்
கூவி னான்குளி ரும்பொழிற் கோளிலி
மேவி னானைத் தொழுவினை வீடுமே. 6

சீர்த்த நன்மனை யாளுஞ் சிறுவரும்
ஆர்த்த சுற்றமும் பற்றிலை யாதலால்
கூத்த னாருறை யுந்திருக் கோளிலி
ஏத்தி நீர்தொழு மின்னிடர் தீருமே. 7

மால தாகி மயங்கு மனிதர்காள்
காலம் வந்து கடைமுடி யாமுனம்
கோல வார்பொழிற் கோளிலி மேவிய
நீல கண்டனை நின்று நினைமினே. 8

கேடு மூடிக் கிடந்துண் ணு நாடது
தேடி நீர் திரி யாதே சிவகதி
கூட லாந்திருக் கோளிலி யீசனைப்
பாடு மின்னிர வோடு பகலுமே. 9

மடுத்து மாமலை யேந்தலுற் றான் றனை
அடர்த்துப் பின்னு மிரங்கி யவற்கருள்
கொடுத்த வன்னுறை கோளிலி யேதொழ
விடுத்து நீங்கிடு மேலை வினைகளே. 10

திருச்சிற்றம்பலம்

திருச்சிற்றம்பலம்

முன்ன மேநினை யாதொழிந் தேனுனை
இன்ன நாளுன சேவடி யேத்திலேன்
செந்நெ லார்வயல் சூழ்திருக் கோளிலி
மன்ன னேயடி யேனை மறவலே. 1

விண்ணு ளார்தொழு தேத்தும் விளக்கினை
மண்ணு ளார்வினை தீர்க்கு மருந்தினைப்
பண்ணு ளார்பயி லுந்திருக் கோளிலி
அண்ண லாரடி யேதொழு துய்ம்மினே. 2

நாளு நம்முடை நாள்க ளறிகிலோம்
ஆளு நோய்களோ ரைம்பதோ டாறெட்டும் 20
ஏழை மைப்பட் டிருந்துநீர் நையாதே
கோளி லியரன் பாதமே கூறுமே. 3

விழவி னோசை யொலியருத் தண்பொழில்
பழகி னார்வினை தீர்க்கும் பழம்பதி
அழல்கை யானம ருந்திருக் கோளிலிக்
குழக னார்திருப் பாதமே கூறுமே. 4

மூல மாகிய மூவர்க்கு மூர்த்தியைக்
கால னாகிய காலற்குங் காலனைக்
கோல மாம்பொழில் சூழ்திருக் கோளிலிச்
சூல பாணிதன் பாதந் தொழுமினே. 5

காற்ற னைக்கட னஞ்சமு துண்டவெண்
நீற்ற னைநிமிர் புன்சடை யண்ணலை
ஆற்ற னையம ருந்திருக் கோளிலி
ஏற்ற னாரடி யேதொழு தேத்துமே. 6

வேத மாயவிண் ணோர்க டலைவனை
ஓதி மன்னுயி ரேத்து மொருவனைக்
கோதி வண்டறை யுந்திருக் கோளிலி
வேத நாயகன் பாதம் விரும்புமே. 7

நீதி யாற்றொழு வார்க டலைவனை
வாதை யான விடுக்கு மணியினைக்
கோதி வண்டறை யுந்திருக் கோளிலி
வேத நாயகன் பாதம் விரும்புமே. 8

மாலு நான்முக னாலு மறிவொணாப்
பாலின் மென்மொழி யாளொரு பங்கனைக்
கோல மாம்பொழில் சூழ்திருக் கோளிலி
நீல கண்டனை நித்தல் நினைமினே. 9

அரக்க னாய விலங்கையர் மன்னனை
நெருக்கி யம்முடி பத்திறுத் தானவற்
கிரக்க மாகி யவன்றிருக் கோளிலி
அருத்தி யாயடி யேதொழு துய்ம்மினே. 10

திருச்சிற்றம்பலம்

உ

சிவமயம்

சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருப்பதிகம்

பண் - நட்டராகம்.

திருச்சிற்றம்பலம்

நீள நினைந்தடியே
னுமைநித்தலுங் கைதொழுவேன்
வாளன கண்மடவா
ளவள்வாடி வருந்தாமே
கோளிலி யெம்பெருமான்
குண்டையூர்ச்சில நெல்லுப்பெற்றேன்
ஆளிலை யெம்பெருமா
னவையட்டித் தரப்பணியே.

வண்டம ருங்குழலா
    ளுமைநங்கையோர் பங்குடையாய்
விண்டவர் தம்புரமூன்
    றெரிசெய்தவெம் வேதியனே
தெண்டிரை நீர்வயல்சூழ்
    திருக்கோளிலி யெம்பெருமான்
அண்டம தாயவனே
    யவையட்டித் தரப்பணியே. 2

பாதியோர் பெண்ணைவைத்தாய்
    படருஞ்சடைக் கங்கைவைத்தாய்
மாதர்நல் லார்வருத்த
    மதுநீயு மறிதியன்றே
கோதில் பொழில்புடைசூழ்
    குண்டையூர்ச்சில நெல்லுப்பெற்றேன்
ஆதியே யற்புதனே
    யவையட்டித் தரப்பணியே. 3

சொல்லுவ தென்னுனை நான்
றொண்டைவாயுமை நங்கையைநீ
புல்கியி டத்திலவைத்தாய்க்
கொருபூசல்செய் தாருளரோ
கொல்லை வளம்புறவிற்
குண்டையூர்ச்சில நெல்லுப்பெற்றேன்
அல்லல் களைந்தடியேற்
கவையட்டித் தரப்பணியே. 4

முல்லை முறுவலுமை
யொருபங்குடை முக்கணனே
பல்லயர் வெண்டலையிற்
பலிகொண்டுழல் பாசுபதா
கொல்லை வளம்புறவிற்
றிருக்கோளிலி யெம்பெருமான்
அல்லல் களைந்தடியேற்
கவையட்டித் தரப்பணியே. 5

குரவ மருங்குழலா
ளுமைநங்கையோர் பங்குடையாய்
பரவை பசிவருத்த
மதுநீயு மறிதியன்றே
குரவ மரும்பொழில்சூழ்
குண்டையூர்ச்சில நெல்லுப்பெற்றேன்
அரவ மசைத்தவனே
யவையட்டித் தரப்பணியே. 6

எம்பெரு மானுனையே
நினைந்தேத்துவ னெப்பொழுதும்
வம்பம ருங்குழலா
ளொருபாக மமர்ந்தவனே
செம்பொனின் மாளிகைசூழ்
திருக்கோளிலி யெம்பெருமான்
அன்பது வாயடியேற்
கவையட்டித் தரப்பணியே. 7

அரக்கன் முடிகரங்க
ளடர்த்திட்டவெம் மாதிப்பிரான்
பரக்கு மரவல்குலாள்
பரவையவள் வாடுகின்றாள்
குரக்கினங் கள்குதிகொள்
குண்டையூர்ச்சில நெல்லுப்பெற்றேன்
இரக்கம தாயடியேற்
கவையட்டித் தரப்பணியே. 8

பண்டைய மால்பிரமன்
பறந்தும்மிடந் தும்மயர்ந்தும்
கண்டில ராயவர்கள்
கழல்காண்டரி தாயபிரான்
தெண்டிரை நீர்வயல்சூழ்
திருக்கோளிலி யெம்பெருமான்
அண்டம தாயவனே
யவையட்டித் தரப்பணியே. 9

கொல்லை வளம்புறவிற்
றிருக்கோளிலி மேயவனை
நல்லவர் தாம்பரவுந்
திருநாவல வூரனவன்
நெல்லிட வாட்கள்வேண்டி
நினைந்தேத்திய பத்தும்வல்லார்
அல்லல் களைந்துலகி
னண்டர்வானுல காள்பவரே. 10

திருச்சிற்றம்பலம்